



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## மானியக் கோரிக்கை எண். 9

## அறிவிப்புகள்
## 2023–2024

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## மானியக் கோரிக்கை எண். 9

## அறிவிப்புகள்
## 2023–2024

**ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கி பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் வினா வங்கி வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள 26,433 மாணவ/ மாணவியருக்கு தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் வினா வங்கி 25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**2. 290 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளுக்கு 1 கோடியே 88 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இடியாப்ப அச்சு இயந்திரம் வழங்கப்படும்.**

தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு தலா ரூ.65,000 மதிப்பில் இடியாப்ப அச்சு இயந்திரம் 1 கோடியே 88 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**3. 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

பள்ளி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு 368 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு தலா ரூ.20,000 மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

4. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் விடுதிகளில் தூய்மைப் பணிகளுக்காகவும், சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் 5 கோடி ரூபாய் வழங்கப்படும்.

தொழில் அனுபவம் மிக்க, வெளிமுகமை (Professional Outsourcing Agency) மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தூய்மைப் பணிகளுக்காகவும், சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் 5 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**5\. 385 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு 1 கோடியே 56 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் LED தொலைக்காட்சி DTH இணைப்புடன் வழங்கப்படும்.**

385 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதி ஒன்றுக்கு 43" LED தொலைக்காட்சி ஒன்றுக்கு ரூ.40,000 மற்றும் 1 DTH இணைப்பு ஆண்டொன்றுக்கு ரூ.2400 என 1 கோடியே 56 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**6. 290 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கில வழி பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் வழங்கப்படும்.**

கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக 290 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளின் முதலாமாண்டு பயிலும் 9000 மாணவ/ மாணவியருக்கு ஆங்கில வழி பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் வழங்கப்படும்.

**7. மலை பிரதேசங்களில் செயல்பட்டு வரும் 20 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு நீர் கொதிகலன் (Geyser) 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மலைப்பிரதேசத்தில் உள்ள நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கும் 20 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர் நலனுக்காக, வெந்நீரில் குளிக்கும் பொருட்டு, ஒரு விடுதிக்கு 2 கொதிகலன் வீதம் 25 லிட்டர் நீர் கொதிகலன் ஒன்றின் விலை ரூ.25000 என்ற மதிப்பில் நீர் கொதிகலன் (Geyser) 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**8. 12 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவியரின் விடுதிகளில் மாணவியர் பாதுகாப்பிற்காக சிசிடிவி கேமரா 12 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.**

12 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு 1 விடுதிக்கு 1 கண்காணிப்பு கேமரா ரூ.1 இலட்சம் வீதம் 12 விடுதிகளில் சிசிடிவி கேமரா 12 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

**9. 141 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவியருக்கு 45 இலட்சம் ரூபாய் செலவில் சுகாதார குட்டை தகளிகள் (Napkin incinerator) வழங்கப்படும்.**

141 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் (ம) சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிக் கல்வி பயின்று வரும் மாணவியரின் உடல் நலத்தைப் பேணவும், விடுதியின் சுற்றுப்புறம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கவும் மாணவியர் விடுதிகளுக்கு சுகாதார குட்டை தகளி (Napkin incinerator) 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**10. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு ஒரு சட்ட அலுவலர் பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் 6 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்கு மற்றும் பல்வேறு வழக்குகளுக்கு எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கும், வழக்குகள் குறித்து ஆலோசனை பெறவும், ஒரு சட்ட அலுவலர் பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் 6 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்.

**11. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல இயக்ககம் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககங்களில் இதுவரை CUG connection வழங்கப்படாத அலுவலர்களுக்கு 17 தொலைபேசி இணைப்புகள் (CUG Connections) 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் BSNL மூலம் வழங்கப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நல இயக்ககம் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககங்களில் இதுவரை CUG connection வழங்கப்படாத அலுவலர்களுக்கு 17 தொலைபேசி இணைப்புகள் (CUG Connections) 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் BSNL மூலம் வழங்கப்படும்.

**12. 3 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு 16 கோடியே 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.**

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி பின்வரும் 3 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் 16 கோடியே 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

1. பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி - 100 மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம்

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி - 50 மாணவர் எண்ணிக்கை கொண்ட விடுதி, மீன்சுருட்டி, அரியலூர் மாவட்டம்

3. சீர்மரபினர் நலக் கல்லூரி - 100 மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்

**13. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. 10 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளுக்கு பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர் பாதுகாப்பினை உறுதி செய்யவும், விடுதிக்கான அரசு நிலத்தினை தனியார் ஆக்கிரமிப்பு செய்வதை தவிர்த்திடவும் 10 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல விடுதிகளுக்கு பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**15. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியரின் நலனுக்காக, புதிதாக 3 கல்லூரி விடுதிகள் 1 கோடியே 30 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தை சார்ந்த மாணவ / மாணவியர் விடுதிகளில் தங்கி கல்வி பயில ஏதுவாக புதிதாக பின்வரும் 3 விடுதிகள், 1 கோடியே 30 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

1. தருமபுரி மாவட்டத்தில் உள்ள எரியூரில், 100 மாணவர் கொண்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி விடுதி
2. ஈரோடு மாவட்டத்தில் உள்ள தேவர் மலையில் 50 மாணவர் கொண்ட பிற்படுத்தப்பட்டோர் பள்ளி விடுதி
3. தேனி மாவட்டத்தில் உள்ள லோயர்கேம்ப் சீர்மரபினர் நலப் பள்ளியில் 50 மாணவியர் கொண்ட கள்ளர் சீரமைப்பு விடுதி

**16. நாமக்கல், மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியில் 30 இலட்சம் ரூபாய் செலவில் மாணவியர் எண்ணிக்கையினை 100லிருந்து 150 ஆக உயர்த்தப்படும்.**

நாமக்கல் மாவட்டம், நாமக்கலில் செயல்பட்டு வரும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியில் தேவையினை கருத்தில் கொண்டு, கூடுதலாக மாணவியர் தங்கிப் பயில ஏதுவாக 30 இலட்சம் ரூபாய் செலவில் மாணவியர் எண்ணிக்கையினை 100லிருந்து 150 ஆக உயர்த்தப்படும்.

## 17. மதுரை மாவட்டம், செக்கானூரணி அரசு கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதியினை கல்லூரி மாணவர் விடுதியாக மாற்றம் செய்யப்படும்.

மதுரை மாவட்டம், செக்கானூரணி அரசு கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதியில் இதர கல்லூரி மாணவர்களும் தங்கி பயன்பெற ஏதுவாக கல்லூரி மாணவர் விடுதியாக மாற்றம் செய்யப்படும்.

**18. திண்டுக்கல் மாவட்டம், கொண்டம-நாயக்கன்பட்டியில் ஒரு உண்டு உறைவிடப்பள்ளி (Residential School) 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.**

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியரில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால் அவர்களது கல்வித் தரத்தை தனியார் பள்ளிக்கு நிகராக உயர்த்தும் பொருட்டு, மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு 80 மாணவர்களுக்கு திண்டுக்கல் மாவட்டம், கொண்டமநாயக்கன்பட்டியில் ஒரு உண்டுஉறைவிடப்பள்ளி (Residential School) 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

**19. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 295 அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் உள்ள நூலகங்களுக்கு புத்தகங்கள் மற்றும் புத்தக அலமாரிகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 295 அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் புத்தகங்களை வாசிப்பதன் மூலம் பொது அறிவுத் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக அப்பள்ளிகளில் உள்ள நூலகங்களுக்கு புதிய புத்தகங்கள் மற்றும் புத்தக அலமாரிகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**20. அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளி வகுப்பறைகளில், டைல்ஸ் பொருத்தும் பணி மற்றும் பள்ளிக் கட்டடங்கள், சுற்றுச்சுவருக்கு வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் 5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளை மேம்படுத்துவதற்காக தரை தளங்களில் டைல்ஸ் பொருத்தும் பணிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்களின் சுவர்களுக்கு வெள்ளையடித்து வர்ணம் பூசும் பணிகள் 5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.